padippakam



# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## பகுதி II

19

மலையகத் தமிழ் மக்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்ட பின் நடைபெற்ற தேர்தல்களில் மலையகத்தில் ஏற்பட்ட எழுச்சியும், ்த்வேகமும், சிங்கள இனவாதிகளை கதி கலங்க வைத்தது.

ஒருங்கிணைக்கப்பட்ட தொழிலாளர் வர்க்கமான மலையக மக்களை வளரவிடுவது தமது எதிர்கால நலனுக்கு பாரிய அச்சுறுத்தலாக அமையும் என்று சிங்கள முதலாளித்துவத் தலைவர்கள் பயந்தார்கள்.

1935-ம் ஆண்டு காலப் பகுதியில் இலங்கை சமசமாஜக் கட்சி, தோட்டப் பகுதிகளுக்குள் இறங்கி வேலை செய்ய ஆரம்பித்ததும், தொழிற்சங்க நடவடிக்கைகள் தீவிரமடைய ஆரம்பித்தன. நடேசையருக்கு கெடுபிடிகள் விதித்ததுபோல் சமசமாஜக்கட்சிக்கு வெள்ளை நிர்வாகங்களால் அவ்வளவு கெடுபிடிகளை விதிக்க முடியவில்லை.

1935-ம் ஆண்டு அவுஸ்திரேலியாவிலிருந்து (பிரித்தானியாவிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு குடியேறியவர்) மார்க் அந்தனி விஸ்டர் பிரேஸ்கோர்டில் என்ற வெள்ளைக்கார இளைஞர் தனது 24-வது வயதில் மாத்தளைப் பகுதியிலுள்ள ரேலுகாஸ் தோட்டத்தில் 'சின்னத்துரை' யாக வேலைபயிலுவதற்கு வந்திருந்தார். ஏற்கனவே அவுஸ்திரேலிய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராக இருந்த அவரால் வெள்ளை நிர்வாகம் தோட்டத்தொழிலாளர்களுக்கு இழைத்து வந்த கொடுமைகளைப் பொறுக்க முடியவில்லை. அதனால் அவர் தனது பதவியைத் தூக்கி எறிந்துவிட்டு சமசமாஜக் கட்சியில் சேர்ந்து தோட்ட நிர்வாகத் தொழிலாளர்களுக்கு செய்து வரும் அயோக்கியத்தனங்களை பகிரங்கமாக அம்பலப்படுத்த ஆரம்பித்தனர். ஒரு வெள்ளைக்காரர் தங்களுடைய பிரச்சினைகளுக்கு குரல் கொடுத்து போராடுவதற்கு முன்வந்ததைக் கண்ட மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் அவரது சொற்படி அதிகளவுக்கு தொழிற் சங்கங்களில் சேர ஆரம்பித்தனர்.

**1935—ம் ஆண்டு அவுஸ்திரேலியாவிலிருந்து (பிரித்தானியாவிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு குடியேறியவர்) மார்க் அந்தனி விஸ்டர் பிரேஸ்கோர்டில் என்ற வெள்ளைக்கார இளைஞர் தனது 24—வது வயதில் மாத்தளைப் பகுதியிலுள்ள ரேலுகாஸ் தோட்டத்தில் 'சின்னத்துரை' யாக வேலைபயிலுவதற்கு வந்திருந்தார். ஏற்கனவே அவுஸ்திரேலிய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராக இருந்த அவரால் வெள்ளை நிர்வாகம் தோட்டத்தொழிலாளர்களுக்கு இழைத்து வந்த கொடுமைகளைப் பொறுக்க முடியவில்லை.**

தங்கள் இனத்தைச் சேர்ந்த ஒருவன் அடிமைக் கூலிகளுக்காக போராட முன்வந்ததை சகித்துக்கொள்ள முடியாத வெள்ளை காலனிய அரசு பிரேஸ்கோர்டிலை 1937-ம் ஆண்டு ஏப்ரல் 22-ம் திகதி நாட்டை விட்டு வெளியேறும் உத்தரவைப் பிறப்பித்தது. அவர் அந்த உத்தரவுக்குப் பணிந்து வெளியேறாததால் அப்போது இலங்கை தேசாதிபதியாக இருந்த சேர் ரெஜினோல்ட் ஸ்ரப்ஸ் அவரை கைது செய்து நாடு கடத்தும் படி உத்தரவிட்டார்.

இந்த உத்தரவுக்கு எதிராக சமசமாஜக்கட்சியும், நடேசையரும், தீவிரமான போராட்டம் நடத்தினார்கள். 1937-ம் ஆண்டு கொழும்பில் நடந்த சமசமாஜக் கட்சியின் மேதின ஊர்வலத்தில் எமக்கு 'பிரேஸ்கோர்டில்' வேண்டும், ஸ்ரெப்பை நாடுகடத்து' என்ற கோசம் பிரதான கோசமாக எழுப்பப்பட்டது. அதன் பின் அவரது பிரச்சினை பற்றி விசாரணை நடத்திய கொழும்பு நீதிமன்றம் அவரது நாடுகடத்தலை செல்லுபடியற்றதாக்கியது.

# தொழிலாளர்களுக்காக போராட்டம் நடாத்திய வெள்ளைக்காரத் தோட்டத்துரை

இந்தச் சம்பவத்திற்கு பிற்பாடு இடது சாரிகளின் பலமே தோட்டத் தொழிலாளர்களில் தான் தங்கியிருக்கிறது. அவர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குரிமையைப் பறித்து விட்டால் இடதுசாரிகளின் முதுகெலும்பை முறித்துவிடலாம் என்று சிங்கள இனவாதிகளும், முதலாளித்துவத் தலைவர்களும் பிரித்தானிய நிர்வாகத்துக்கு ஆலோசனை தெரிவித்தனர்.

1889-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட ஒரு சட்டத்தில் ஐரோப்பியர்கள், மற்றும் இந்தியர்களுக்கு கிராமிய நிர்வாகத்தில் பங்குபற்றும் உரிமை மறுக்கப்பட்டிருந்தது. அதற்கு அவர்கள் கிராமிய நிர்வாகத்துடன் இணைந்த பிரிவினர் அல்ல என்று காரணம் கூறப்பட்டிருந்தது.

1937-ல் இந்தச் சட்டம் திருத்தப்பட்டபோது, ஐரோப்பியர்களுக்கு மட்டும் (பறங்கியர் உட்பட) கிராமிய உறுப்பினர் உரிமை வழங்கப்பட்டது. இந்தியத் தொழிலாளர்களுக்கு இந்த உரிமை வழங்கப்படவில்லை.

இதனால் இந்தச் சட்டத் திருத்தத்துக்கு அப்போதைய சட்டசபையில் பலத்த எதிர்ப்புக் கிளம்பியது. இந்திய அரசாங்கம் கூட இது இனவேறுபாட்டின் அடிப்படையில் அமைந்த சட்டம் என இதைக் கண்டித்தது.

அப்போது, இலங்கை சட்டசபையில் லங்கா சமசமாஜக் கட்சி உறுப்பினராக இருந்த கலாநிதி என்.எம். பெரேரா,

'ஐரோப்பிய தோட்ட முதலாளிகளுக்கு வாக்குரிமை வழங்குவதை அவர்கள் எதிர்க்கவில்லை. சொத்துடையோரும், சுரண்டலை அதன் முழு அர்த்தத்தில் செயற்படுத்தி மக்களைச் சுரண்டுவோரும் வாக்குரிமை பெறுகின்றனர். ஆனால், ஏழைத் தொழிலாளிகளுக்கு வாக்குரிமை வழங்கப்படவில்லை. பயத்தோடு பெரிதுபடுத்திக் காட்டும் பொய்த்தோற்றம் ஒரு சிலரால் உருவாக்கப்பட்ட கற்பனையே. இந்தியத் தொழிலாளர்களின் நலன்களும், இந்த நாட்டில் மிகப்பெருந்தொகையாக வாழும் நாட்டுப்புற மக்களது நலன்களும் ஒரே தன்மையானவையே. உண்மையான போராட்டம் முதலாளி வர்க்கத்துக்கு எதிரானதே. அவர்கள் இலங்கையர்களா? இந்தியர்களா? என்பதல்ல' என்று சிங்கள மந்திரி சபையின் கொள்கைகளை கண்டித்துப்பேசினார்.

**'ஐரோப்பிய தோட்ட முதலாளிகளுக்கு வாக்குரிமை வழங்குவதை அவர்கள் எதிர்க்கவில்லை. சொத்துடையோரும், சுரண்டலை அதன் முழு அர்த்தத்தில் செயற்படுத்தி மக்களைச் சுரண்டுவோரும் வாக்குரிமை பெறுகின்றனர். ஆனால், ஏழைத் தொழிலாளிகளுக்கு வாக்குரிமை வழங்கப்படவில்லை.**

பிற்காலத்தில் கலாநிதி என்.எம்.பெரேரா இனவாதச் சேற்றுக்குள் விழுந்துவிட்டாலும் அன்றைய காலகட்டத்தில் அவர் மலையகத் தொழிலாளர்களின் நலன்களுக்காக குரல்கொடுத்த தலைவர்களில் ஒருவராக இருந்தார்.

இத்தகைய எதிர்ப்புக்களின் பயனாக 1937-ம் ஆண்டு பிற்பகுதியில் இந்தச் சட்டத்துக்கு ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டது. அதாவது தோட்டத் தொழிலாளர்கள் எவராயிருந்தாலும் அவர்கள் சிங்களவர்களாக இருந்தாலும்சரி, மலையகத் தமிழர்களாக இருந்தாலும் சரி கிராமிய நிர்வாகத்தில் அவர்களுக்கு உறுப்புரிமை கிடையாது என்று புதிய சட்டம் கூறியது. தோட்டத் தொழிற்துறையில் மிகமிகக் குறைந்தளவு சிங்களவர்களே இருந்ததால் இந்தச் சட்டம் மலையகத் தமிழர்களுக்கு எதிரானதாகவே இருந்தது.

இவ்வாறு சட்டரீதியாகவும், சட்டத்துக்கு புறம்பான வகையிலும், இந்தியர்களுக்கு (மலையகத்தமிழ் தோட்டத் தொழிலாளர்கள், மலையாளிகள், நகர்ப்புறத்தமிழ் மற்றும் மார்வாடி வியாபாரிகள்) எதிரான நடவடிக்கைகள்- இலங்கையில் திட்டமிட்டு முடுக்கிவிடப்பட்டிருந்த காலகட்டத்தில் அதாவது 1939-ம் ஆண்டு, மகாத்மா காந்தியின் பிரதிநிதியாக பண்டிட் ஜவர்கர்லால்நேரு இலங்கைக்கு வந்து, சிங்களத்தலைவர்களுடனும், காலனிய அரசுடனும் பேச்சுவார்த்தை நடத்தினர்.

**சட்ட ரீதியாகவும், சட்டத்துக்கு புறம்பான வகையிலும், இந்தியர்களுக்கு (மலையகத்தமிழ் தோட்டத் தொழிலாளர்கள், மலையாளிகள், நகர்ப்புறத்தமிழ் மற்றும் மார்வாடி வியாபாரிகள்) எதிரான நடவடிக்கைகள்_ இலங்கையில் திட்டமிட்டு முடுக்கிவிடப்பட்டிருந்த காலகட்டத்தில் அதாவது 1939_ம் ஆண்டு, மகாத்மா காந்தியின் பிரதிநிதியாக பண்டிட் ஜவர்கர்லால்நேரு இலங்கைக்கு வந்து, சிங்களத்தலைவர்களுடனும், காலனிய அரசுடனும் பேச்சுவார்த்தை நடத்தினர்.**

அவர் இந்தியாவுக்குத் திரும்பிச்செல்வதற்கு முன் இலங்கையில் இருந்த இந்தியசமூகத்தின், மேல்தட்டுத் தலைவர்களை அழைத்து, இலங்கையில் இருக்கும் இந்தியர்களின் நலனுக்காக இலங்கையில் இருக்கும் எல்லா இந்தியர்கள் சங்கம் மற்றும் அமைப்புக்களையும் ஒருங்கிணைத்து இலங்கை இந்தியக் காங்கிரஸ் என்ற அமைப்பைத் தொடங்கும்படி ஆலோசனை கூறிவிட்டுச் சென்றார்.

அதன்படி 1939-ம் ஆண்டு ஜூலைமாதம் 15-ம் திகதி நள்ளிரவில் இலங்கை இந்தியர் காங்கிரஸ் கொழும்பில் உருவாக்கப்பட்டது. அதன் முதலாவது தலைவராக வீ.ஆர்.என். லட்சுமணன் செட்டியார் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இலங்கை நிலைமைகளை நேரடியாக அவதானித்துவிட்டு இந்தியா சென்று செய்த சிபார்சின்பேரில் 1939-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1-ம் திகதி இந்திய அரசு பயிற்றப்படாத தொழிலாளர்கள் இந்தியாவைவிட்டு வெளியேறுவதற்கு தடை விதித்தது.

இந்தத்தடை - புதிய தொழிலாளர்களைக் கொண்டுவர முடியாத நிலையில், நாட்டிலுள்ள தொழிலாளர்களை வைத்து வேலைவாங்கும் நிலைமையை தோட்டத் துரைமாருக்கு உண்டாக்கியது

**- நக்கீரன்**

படிப்பகம்